# Chapter 3
# தனித் திறமை

---

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

**கேள்வி** 1.
தகுதி இச்சொல் உணர்த்தும் பொருள் ________________ .
அ) தரம்
ஆ) மரம்
இ) கரம்
ஈ) வரம்
**விடை:**
அ) தரம்

**கேள்வி** 2.
பகைவர்கள் இச்சொல்லின் எதிர்ச்சொல் ________________ .
அ) நண்பர்கள்
ஆ) எதிரிகள்
இ) அயலவர்கள்
ஈ) சகோதரர்கள்
**விடை:**
அ) நண்பர்கள்

**கேள்வி** 3.
பணி இச்சொல் உணர்த்தும் பொருள் ________________ .
அ) வாழை
ஆ) வேளை
இ) வேலை
ஈ) வாளை
**விடை:**
இ) வேலை

**கேள்வி** 4.
படைத்தளபதி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
________________ .
அ) படைத் + தளபதி

ஆ) படை + தளபதி
இ) படையின் + தளபதி
ஈ) படைத்த + தளபதி
**விடை:**
ஆ) படை + தளபதி

**கேள்வி** 5.
எதை + பார்த்தாலும் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ___________________.
அ) எதைபார்த்தாலும்
ஆ) எதபார்த்தாலும்
இ) எதைப்பார்த்தாலும்
ஈ) எதைபார்தாலும் விடை:
**விடை:**
இ) எதைப்பார்த்தாலும்

## வினாக்களுக்கு விடையளி.

**கேள்வி** 1.
காட்டில் விலங்குகளின் கூட்டம் யார் தலைமையில் நடைபெற்றது?
**விடை:**
காட்டில் விலங்குகளின் கூட்டம் புலிராஜாவின் தலைமையில் நடைபெற்றது.

**கேள்வி** 2.
புலிராஜா, படைத்தளபதி பொறுப்பை யாருக்குக் கொடுத்தார்?
**விடை:**
புலிராஜா, படைத்தளபதி பொறுப்பை சிங்கக்குட்டிக்குக் கொடுத்தார்.

**கேள்வி** 3.
ஆந்தைக்கு என்ன பதவி கொடுக்கப்பட்டது?
**விடை:**
ஆந்தைக்கு இரவு காவல் அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது.

**கேள்வி** 4.
கரடி எந்தெந்த விலங்குகள் தகுதியற்றவை எனக் கூறியது?
**விடை:**
ஆமை, முயல், கழுதை ஆகிய விலங்குகள் தகுதியற்றவை எனக் கரடி கூறியது.

**கேள்வி** 5.
இந்தக் கதையின் மூலம் நீ அறிந்து கொள்வது யாது?
**விடை:**
ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்திறமை உண்டு. அதனை அடையாளம் கண்டு அதற்கேற்ற பொறுப்பை அவருக்குக் கொடுக்க வேண்டும்.

## புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துக.

பதுங்கிச் செல்வேன். பாய்ந்து இரையைப் பிடிப்பேன், நான் யார்?




இரவில் விழித்தும் பகலில் தூங்கியும் வாழ்வேன், என் கண்களை எல்லாத்திசையிலும் திருப்புவேன், நான் யார்?



என் காதுகள் நீண்டிருக்கும் வேகமாக ஓடுவேன், கேரட் எனக்கு மிகவும் பிடிக்கும், நான் யார்?



**விடை:**



முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடர் உருவாக்குக.

1. காட்டில் விலங்குகள் நடந்தது கூட்டம்

2. இரவுக்காவல் நீங்கள்தாம் அமைச்சர் ஆந்தையாரே

3. முயல் ஓடும் வேகமாக அதி

4. கூடாது யாரையும் போடக் எடை குறைவாக

**விடை:**

1. காட்டில் விலங்குகள் நடந்தது கூட்டம்

**காட்டில் விலங்குகள் கூட்டம் நடந்தது.**

2. இரவுக்காவல் நீங்கள்தாம் அமைச்சர் ஆந்தையாரே

**ஆந்தையாரே! நீங்கள்தாம் இரவுக்காவல் அமைச்சர்**

3. முயல் ஓடும் வேகமாக அதி

**முயல் அதி வேகமாக ஓடும்.**


4. கூடாது யாரையும் போடக் எடை குறைவாக

**யாரையும் குறைவாக எடைபோடக் கூடாது.**

எந்த விலங்கிற்கு, எந்தப் பணி?




**விடை:**




## பக்கம் 19

பெயர் எது? செயல் எது?

| | | பெயர் | செயல் |
|---|---|---|---|
| 1. | குழலி பாடம் படித்தாள். | _______ <br> _______ | _______ |
| 2. | அமுதன் பந்து விளையாடினான். | _______ <br> _______ | _______ |
| 3. | மரம் செழித்து வளர்ந்தது. | _______ | _______ <br> _______ |

**விடை:**

| | | பெயர் | செயல் |
|---|---|---|---|
| 1. | குழலி பாடம் படித்தாள் | குழலி <br> பாடம் | படித்தாள் |
| 2. | அமுதன் பந்து விளையாடினான் | அமுதன் <br> பந்து | விளையாடினான் |
| 3. | மரம் செழித்து வளர்ந்தது | மரம் | செழித்தது <br> வளர்ந்தது |

# மொழியோடு விளையாடு

எழுத்துகளின் வகைகள் :

உயிரெழுத்துகள் – 12
**விடை:**
அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

குறில் (குற்றெழுத்துகள்)
**விடை:**
அ, இ, உ, எ, ஒ

நெடில் (நெட்டெழுத்துகள்)
**விடை:**
ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஔ

மெய்யெழுத்துகள் – 18
**விடை:**
க், ஞ், ச், ந், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்

வல்லினம்
**விடை:**
க், ச், ட், த், ப், ற்

மெல்லினம்
**விடை:**
ங், ஞ், ண், ந், ம், ன்

இடையினம்
**விடை:**
ய், ர், ல், வ், ழ், ள்

ஆய்த எழுத்து
**விடை:**
ஃ